MC.32/2025

10.03.2026

RW1 – சத்தியசீலன் த/பெ.செல்வம், வயது–35

மனுதாரர் ஆஜர்

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –12.32 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –01.07 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 10.03.2026

எ.ம.சா.1 – மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

முதல் மனுதாரர் அஷ்வினி உங்கள் மனைவி என்றால் சரிதான். 2-ம் மனுதாரர் யுகவேந்தன் உங்கள் மகன் என்றால் சரிதான். உங்கள் மகன் என்ன படித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எங்கு படிக்கிறார் என்றால் வித்யா விகாஸ் பள்ளியில் படித்து வருகிறார். நீங்கள் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் இடைக்கால ஜீவனாம்சம் மனுதாரருக்கு செலுத்தி வருகிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த விவாகாரத்து வழக்கு எண்.30/2021 என்றால் சரிதான். உங்கள் மனைவி உங்கள் மீது ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்த மனு எண்.44/2022 என்றால் சரிதான். உங்களுக்கு திருமணத்தின்போது பெண் வீட்டார் இரண்டு சவரன் நகை போட்டார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த நகையை அவர்களே வைத்துக்கொண்டார்கள். உங்கள் மனைவிக்கு திருமணத்தின்போது 10

சவரண் நகை போட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல 7 சவரண் நகை தான் போட்டார்கள். உங்கள் திருமணத்தின்போது ரூ.1,00,000/- மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல ரூ.20,000/-க்கு தான் சீர்வரிசை கொடுத்தார்கள். நகையும் சீர்வரிசை பொருட்களும் உங்களிடம் தான் உள்ளது என்று சொன்னால் சீர்வரிசை பொருட்கள் என் வசமும் நகை முதல் மனுதாரர் வசம் உள்ளது. உங்களுக்கும் முதல் மனுதாரருக்கும் சுமூகமான உறவு இல்லை எனவும் உங்களையும் உங்கள் பெற்றோர்களையும் தகாத வார்த்தைகளால் திட்டுவார்கள் என வழக்கிற்காக பொய்யான சங்கதி சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பொது இடத்தில் உங்களை முதல் மனுதாரர் திட்டுவதாகவும் நீங்கள் பொறுத்துக்கொண்டு சென்றதாகவும் பொய்யான சங்கதி சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பெற்றோர்களிடம் இருந்து பிரிந்து வந்து தனி குடித்தனம் வரும்படியும் முதல் மனுதாரர் அழைத்ததாக வழக்கிற்காக பொய்யான சங்கதி சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல நான் சொல்லியது உண்மை சங்கதிதான். உங்களை அடிமையாக இருக்க வேண்டும் என்று முதல் மனுதாரர் சொல்லியதாக வழக்கிற்காக பொய்யான சங்கதி சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல நான் சொல்லியது உண்மை சங்கதி தான். உங்கள் மனைவி பல ஆண்களுடன் அலைபேசியிலும், காணொளி மூலமாகவும் பேசுவதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளீர்கள் எனவும் மேற்படி ஆண்களின் பெயர் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் மனைவி பல ஆண்களுடன் பேசியதற்கான ஆதாரம்

உங்களிடம் இருப்பதாக சொல்லுவதற்கு வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என் வசம் ஆதாரம் உள்ளது. உங்கள் மனைவி அடையாளம் தெரியாத ஆண் நபருடன் தவறான தொடர்பில் இருப்பதாக முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் உங்கள் மனைவி நடத்தையின் மீது பொய்யான சங்கதி சொல்லி உள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மனைவி எந்த வேலையும் செய்ய மாட்டார் தற்கொலை முயற்சி செய்வார் என்று பொய்யான சங்கதி சொல்லி உள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல அது உண்மை சந்ததி தான். வழக்கறிஞர் அறிவிப்பு குறித்து முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளீர்கள் அதை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் திருப்பூர் பனியன் கம்பெனியில் சூப்பர்வைசராக பணி செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய மாத வருமானம் ரூபாய் 50,000/−க்கும் கூடுதல் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் மற்றும் வீடுகள் உள்ளதாக உங்கள் மனைவி சொல்லுகிறார் என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் மனைவியுடன் சேர்ந்து வாழ்வதற்கு சட்டப்படியாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் காவல் நிலையம் வரை சென்று சமாதானம் செய்ய பேசினேன். நீங்கள் சமாதானம் பேசியதாக சொல்லுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. முதல் மனுதாரரின் நடத்தை குறைவு காரணமாகத்தான் குடும்பம் சிதறியதாகவும் நீங்கள் பலமுறை சேர்ந்து வாழ முயற்சி செய்ததாகவும் சொல்லும் சங்கதி வழக்கிற்காக சொல்லப்படும் பொய்யான சங்கதி என்று சொன்னால் சரியல்ல.

முதல் மனுதாரர் தன்னிச்சையாக பிரிந்து சென்றார் என்று வழக்கிற்காக பொய்யான சங்கதி சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் உங்கள் மகனை நீங்கள் பராமரிக்க மறுத்ததில்லை என்று சொல்லி உள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். முதல் மனுதாரர் தன் பெற்றோர்களுடன் வசதி வாய்ப்புடன் வாழ்ந்து வருவதாக பொய்யான சங்கதி சொல்லி உள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல உண்மை சங்கதிதான். நீங்கள் திருமணமான உடன் திருப்பூருக்கு சென்று விட்டீர்கள் எனவும் முதல் மனுதாரரை வீட்டில் காலை முதல் இரவு வரை வேலை வாங்கி உள்ளீர்கள் எனவும் முதல் மனுதாரர் அது குறித்து உங்களிடம் கேட்டதற்கு வரதட்சனை குறைவாக போட்டு வந்த காரணத்தினால் அவ்வாறு வேலை வாங்கி வருவதாக சொன்னீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் உடன் பணிபுரியும் பல பெண்களுடன் தவறான தொடர்பில் இருந்து உல்லாசமாக வாழ்ந்து வந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய தவறான நடத்தை குறித்து முதல் மனுதாரர் கேட்டதற்கு நீங்கள் தான் அவரை அடித்து துரத்தி விட்டீர்கள் என்றால் சரியல்ல. முதல் மனுதாரர் இன்றைய தேதிவரையிலும் உங்களுடன் சேர்ந்து வாழ முயற்சித்து வந்தார் எனவும் நீங்கள் தான் வாழ மறுத்து விட்டீர்கள் என்றால் சரியல்ல. நீங்களும் உங்கள் பெற்றோர்களும் சேர்ந்து தான் முதல் மனுதாரர் கொடுமைப்படுத்தும் அவருடைய தாயார் வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டீர்கள் எனவும் முதல் மனுதாரர் தன்னிச்சையாக தன் பெற்றோர் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. உங்கள் மனைவி மற்றும் குழந்தையை பராமரித்து வருவது உங்களுடைய கடமை என்று சொன்னால்

**அப்போது வரை சரிதான் தற்போதைய சூழலில் சரியில்லை. நான் என் குழந்தையை மட்டும் பராமரிக்க சம்மதிக்கிறேன். மனுதாரர் கோரி உள்ளவாறு மனு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.